**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2021**
**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஆலமர் செல்வன் என்பவர் யார்?
2. சிவனைப் போற்றிப்பாடும் நூல்களுக்கு முன்னோடியாக அமைந்த நூல் எது?
3. ஒன்பதாம் திருமுறை என்று அழைக்கப்படுவன எவை?
4. உத்தம சோழ பல்லவன் என்ற பட்டப்பெயர் உடையவர் யார்?
5. நரசிம்ம அவதாரத்தில் திருமால் பயன்படுத்திய ஆயுதம் எது?
6. அக்காரக்கனி என்பது யாரைக் குறிக்கும்.
7. வைணவத் திருத்தலங்கள் மொத்தம் எத்தனை?
8. சுவலனசடியின் மகள்பெயர் என்ன?
9. சமணத் தீர்த்தங்கரருள் 22 ஆம் தீர்த்தங்கரர் யார் ?
10. பௌத்த சமயக் கோட்பாடுகளை விரிவாகப் பேசும் ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
11. மக்கள், தேவர் இருவருக்கும் ஒத்த முடிவினை உடைய அறம் எது?
12. தம்பிரான் வணக்கம் என்ற நூல் வெளிவந்த ஆண்டு யாது?
13. 'புத்தம் வீடு' என்பது எவ்வகையான புதினம்?
14. பல்சந்தமாலையின் ஆசிரியர் பெயர் என்ன?
15. இஸ்லாம் சமயத்தை நிறுவியவர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. பஞ்சபுராணம் என்பவை யாவை?
2. காரைக்கால் அம்மையார் பாடிய நூல்களைக் குறிப்பிடுக.
3. நம்மாழ்வாரின் அருளிச்செயல்களை எழுதுக.
4. வைணவக் காப்பியங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.
5. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள சமணக் கூறுகளைக் கூறுக.
6. நிகண்டுகள் தோன்றக் காரணம் என்ன?
7. திருக்காவலூர்க் கலம்பகம்–குறிப்பு வரைக.
8. முதல் இஸ்லாமிய உரைநடை நூல் குறித்து விவரி?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) திருமழிசை ஆழ்வாரின் பக்தித்திறனை ஆராய்க.

2. (அ) சமணர்கள் இயற்றிய இலக்கண நூல்கள் குறித்து விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பௌத்தர்களின் தமிழ்த்தொண்டினைத் தொகுத்தெழுதுக.

3. (அ) கிறித்தவக் கீர்த்தனைகளின் சிறப்புகளைக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியர்களின் நவீன இலக்கிய ஆளுமைகள் குறித்துக் கட்டுரை வரைக.

❋ ❋ ❋